கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம் அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி மன்ற தலைவரின் நடவடிக்கைகள்

முன்னிலை: திருமதி. சாந்தி ராஜேந்திரன்

மனைப்பிரிவு அங்கீகார எண்: 9/2023-2024 நாள்:26.02.2024

பொருள் : மனைப்பிரிவு அங்கீகாரம் - கோயம்புத்தூர் மாவட்டம் - சூலூர் வட்டம் - சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம் அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் - நில அளவு எண்: 126/1 - ல் 2.19 ஏக்கர் (0-88.65 ஹெக்டேர்) பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கி உத்தரவு பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை :

1. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர்/ இணை இயக்குநர் இணையவழி விண்ணப்பம் எண்: CBELPA/4L5QK3WE/2022/2022/TCP நாள்: 23.05.2023
2. மனுதாரர்கள்: V .ஸ்ரீனிவாசன் விண்ணப்பம்.
3. சூலூர் சார்பதிவாளர் அலுவலக தானப்பத்திர எண்கள் : 5583/2023 மற்றும் 5584/2023
4. இணைய தள ரசீது எண்: 2023-2024/11/18/1/7/60 நாள்:26.02.2024
5. அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி மன்றத் தீர்மான எண்: 41 நாள்: 14.02.2024

*****

உத்தரவு :

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம் அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் நில அளவு எண்: 126/1 - ல் 2.19 ஏக்கர் (0-88.65 ஹெக்டேர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை -3 ல் காணும் சூலூர் சார்பதிவாளர் அலுவலக தானப்பத்திர எண் : 5583/2023 மற்றும் 5584/2023 -ன்படி ஊராட்சிக்கு சாலைகள், பொது உபயோகம் மற்றும் TANGEDCO இடங்களை பார்வை -2 ல் காணும் மனுதாரர்களால் உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பார்வை - 1ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர்/இணைஇயக்குநர் அவர்களின் உத்தரவின்படி மனைப்பிரிவிற்கு இணையவழி விண்ணப்பம் எண்:CBELPA/4L5QK3WE/2022/2022/TCP நாள்:23.05.2023-ன்படி ம.வ/ (கோ.உ.தி.கு) எண்: 243/2023 -ன் படி தொழில்நுட்ப அனுமதியும் மற்றும் 280/2023- ன்படி திட்ட அனுமதியும் வழங்கி உத்தரவு பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து பார்வை -4 ல் காணும் ஊராட்சியின் இணைய தள ரசீதின்படி அபிவிருத்தி கட்டணங்கள் மனுதாரர்களால் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் பார்வை - 5ல் காணும் இவ்வூராட்சி மன்றத் தீர்மான எண் : 41 நாள்: 14.02.2024 - ன்படி இறுதி அங்கீகாரம் வழங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்கண்ட தொழில் நுட்ப அனுமதியில் கண்டுள்ள நிபந்தனைகளின்படியும் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு அங்கீகார எண்:9/2023-2024 வழங்கி இதன் மூலம் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. குடிநீர் வசதி ஏற்படுத்த வேண்டும்.
2. தெருவிளக்கு வசதி ஏற்படுத்த வேண்டும்.
3. தார்சாலைவசதி ஏற்படுத்த வேண்டும்.
4. இத்துடன் இணைக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளவாறு மனைப்பிரிவுகள் அடங்கிய 6' X 4' அளவில் நிரந்தர வரைபடம் ஒன்றினை பொதுமக்களுக்கு தெரியுமாறு மனைப்பிரிவு பகுதியில் நிறுவப்பட வேண்டும்.

R தொகு/36/2024

தலைவர்
அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி

இணைப்பு :

1. உள்ளூர் திட்டக்குழும உத்தரவு மற்றும் நிபந்தனைகள்.
2. மனைப்பிரிவு வரைபடம்.
3. ஊராட்சி மன்ற தீர்மான நகல்.

பெறுநர்:

V .ஸ்ரீனிவாசன்,

13/2 வசந்த விஹார் ,

சூலூர்,

கோயமுத்தூர்.

நகல்:

1. உயர் திரு. இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் அவர்கள்,
   மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர்,
   கதவு எண்: 50, தரை மற்றும் முதல் தளம்,
   பெட்ரோல் பங்க் சாலை, காந்திமாநகர், கணபதி,
   கோயம்புத்தூர் - 641 004.

2. சார்பதிவாளர்,
   சார்பதிவகம்,சூலூர் - 641 402.